DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | பீமராஜ் |
| Father's Name | முனிசாமி |
| Village | அரபாண்டகுப்பம் |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | விவசாயம் |
| Age | 70 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **01.08.2025**

**O.S. No. 101/2018 வா.சா.2**

**குறுக்கு விசாரணை:-**

1. வாதி மற்றும் பிரதிவாதிக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. வாதி மற்றும் பிரதிவாதி சொத்துக்கள் சம்மந்தப்பட்ட பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதிக்கு இடையே ஏற்பட்ட பஞ்சாயத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. வாதி மற்றும் பிரதிவாதிக்கு இடையே ஏற்பட்ட பிரச்சனை சம்மந்தமாக காவல் நிலையம் சென்றது பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது.

2. என்னுடை சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் 447, 448, 449 ஆகும். மேற்படி என்னுடைய சொத்தின் சர்வே எண்ணில் உள்ள மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், மூன்று சர்வே

எண்ணையும் சேர்த்து 8 ஏக்கர் இருக்கும். மேற்படி என்னுடைய சொத்துக்கள் ஒரே துண்டாக உள்ளதா என்றால் ஆமாம். என்னுடைய சொத்திற்கும் வாதி மற்றும் பிரதிவாதி சொத்திற்கும் இடையே பொது வரப்பு உண்டா என்றால் இல்லை.

3. வாதி மற்றும் பிரதிவாதிக்கு இடையே பிரச்சனை ஏதேனும் நான் முன்னின்று தீர்த்து வைத்தேனா என்றால் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதிக்கு இடையே பிரச்சனை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் வாதி அழைத்தன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றாலும் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லப்பட்ட சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

| | |
|---|---|
| *ESHWAR VISWANATHAN* | *DISTRICT MUNSIF*<br>*Digitally signed by ESHWAR VISWANATHAN* |

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**வாணியம்பாடி.**